அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:61/2016
தேதி : 31/03/2016

# பத்திரிக்கைச் செய்தி

**1.சுங்கச் சாவடி கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும்** :

தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் மொத்தம் உள்ள 44 சுங்கச் சாவடிகளில் 18 இடங்களில் ஏப்ரல் 1 முதல், 12 சதவிகிதம் வரை கட்டண அதிகரிப்பு அமல்படுத்தப்பட உள்ளது. இந்த கட்டண உயர்வு அனைத்துத் தரப்பினரையும் பாதிப்பிற்குள்ளாக்கும். குறிப்பாக சரக்குப் போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகி அதன் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயரக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதே வேளை சுங்கச் சாவடி நுழைவுக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டாலும், நெடுஞ்சாலைகளில் பராமரிப்புப் பணிகள் செம்மைப் படுத்தப்படவில்லை, அடிப்படை வசதிகளும் அதிகரிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்த வண்ணம் உள்ளன. பெட்ரோல், டீசல் விலைகளைக் கணிசமாக குறைக்காத சூழ்நிலையில் சுங்கச்சாவடிக் கட்டண அதிகரிப்பு விரும்பத்தகாததாகும். எனவே சுங்கச்சாவடி கட்டண உயர்வை திரும்பப் பெறுவதோடு, உரிமம் முடிந்த சுங்கச்சாவடிகள் அனைத்திலும் கட்டணம் வசூல் செய்வதை முற்றிலும் தடுக்க வேண்டும் என்று மத்திய அரசை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

## 2. ஆவணமின்றி பணம் கொண்டு செல்வதை 5 லட்ச ரூபாய் வரை தேர்தல் ஆணையம் அனுமதிக்க வேண்டும்

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, பறக்கும் படை சோதனைகளில் தகுந்த ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு புறம் இத்தகைய நடவடிக்கைகள் தேர்தல் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கானவை என்றிருந்தாலும், பொதுமக்களும், வியாபாரிகளும் பெரும் அளவில் பாதிப்பிற்கு உள்ளாகி வரும் நிலை நிலவுகிறது. வணிகத்தின் பெருக்கம், உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் 1 லட்சம், 2 லட்சம் என்று கையாள்பவர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதில் ஆச்சரியமில்லை. வணிகம் சாராத, தனிநபர் சார்ந்து கையாளப்படும் தொகைகள் அனைத்திற்கும் ஆவணங்கள் வைத்திருப்பது என்பது முற்றிலும் சாத்தியமில்லை. எனவே தற்சமயம் அதிகரித்திருக்கும் வணிகப் பெருக்கம், பணப்புழக்கம், திருமணங்கள் உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகள் போன்றவற்றால் பெருகிவரும் பணப் பரிமாற்றங்களைத் தேர்தல் ஆணையம் கருத்தில் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில், தகுந்த ஆவணம் இன்றி பணம் கொண்டு செல்வதற்கான குறைந்த பட்சத் தொகையாக 5 லட்சம் ரூபாய் என நிர்ணயித்து, 5 லட்சம் ரூபாய் வரை ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லலாம் என்ற உத்தரவை உடனடியாக பிறப்பிக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்